DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கோடீஸ்வரி | Father/Husband Name : செல்வராஜ் |
| Age : 58 | Village : சுப்பையாபுரம் |
| Taluk : | Calling : பெட்டி கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jul 2026

(A1 present. A2, A3 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் சுப்பையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்டி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டு அருகில் குடியிருக்கிறார். 2 வது எதிரி மணி 1 வது எதிரியின் தங்கை மகன் ஆவார். 3 வது எதிரி ராஜாராம் 1 வது எதிரியின் தம்பி ஆவார். எங்கள் குடும்த்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கு பிரச்சனை இருந்து வருகிறது. அதனால் எங்களுக்குள் தினமும் சண்டை வரும்.

2. 17.04.2022 ம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எங்களுடைய வீட்டுடன் அமைந்துள்ள கடையின் வாசலில் இருந்தபோது 1 வது எதிரி ராஜேஸ்வரி அங்கு வந்து என்னை பார்த்து வெளியே வாடி முண்டை என்று பச்ச பச்சையாக பேசினார். அவருடைய தங்கை மகன் அங்கு வந்து உன்னுடைய புருஷனை வெளியே வரச்சொல்லுடி என்று கூறி அருகில் இருந்த காய்ந்துபோன அகத்திமரக் கம்பை உடைத்துக்கொண்டு வந்தார். அப்பொழுது நான் எதிரிகளின் அடவாடித்தனம் தாங்கமுடியாமல் என்னுடைய கணவரிடம் கூறி போலீசிடம் தகவல் சொல்லுமாறு கூறினேன். அப்பொழுது 1 வது எதிரி நீ போலீஸ்கிட்டதான போவ என்று கூறி பொது இடத்தில் உடலில் துணியில்லாமல் செய்துவிட்டார்.

3. அந்த இடத்தில் இருந்த பரமசிவமும், சுப்புலட்சுமியும் வந்து எதிரிகளிடம் ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள் என்று சொன்னபோது உங்களுடைய வேலையை பார்த்து செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். எதிரிகளால் எங்களுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. அவர்களால் எங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு இல்லை. என்னை பார்த்து பேசிய வார்த்தைகளால் எனக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டது.

4. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

5. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்குப் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் நான் என்னுடைய கடையின் முன்பு இருந்தேன் என்று

என்னுடைய புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் 2வது எதிரி மணி அகத்தி மர குச்சியை ஒடித்து வந்தார் என்று என்னுடைய புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு சம்பவத்தின் போது ஒன்றாவது எதிரி ராஜேஸ்வரி என்னை பார்த்து நீ எங்கு வேண்டுமானாலும் போ என்று கூறினார் என்று நான் கூறியுள்ள விபரத்தை என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு சம்பவத்தின் போது 1வது எதிரி துணி இல்லாமல் நின்றார் என்று கூறும் விபரத்தையும் என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறியுள்ளேன்.

6. நான் என்னுடைய கணவரிடம் எதிரிகளின் அராஜகம் தாங்க முடியவில்லை போலீசாருக்கு போன் செய்யுங்கள் என்று கூறும் விபரத்தையும் என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சண்டையை விலக்கி விட வந்த பரமசிவத்தை பார்த்து நீ உன்னுடைய வேலையை பார்த்துப் போ என்று எதிரிகள் கூறியதாக நான் கூறும் விபரத்தை என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

7. வழக்கு சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க காலை 08.30 மணிக்கு சென்றேன். புகாரை யாரிடம் கொடுத்தேன் என்றால் காவல் நிலையத்தில் இருந்த போலீசாரிடம் கொடுத்தேன். புகாரை எங்கு வைத்து யார் எழுதினார் என்றால் காவல் நிலையத்திற்கு வந்த ஒரு நபர் எழுதிக் கொடுத்தார். அவர் யாரென்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு எப்பொழுது போன் செய்தோம் என்றால் இரவு 07.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே போன் செய்து விட்டோம். போலீசார் போனில் என்ன கூறினார்கள் என்றால் காவல் நிலையத்திற்கு வந்து மனு கொடுக்குமாறு கூறினார்கள். அன்றைய தினம் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை.

8. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு மனு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் கொடுத்த மனுவிற்கு காவல் நிலையத்தில் CSR No.112/2022 என்று மனு ரசீது எனக்கு வழங்கப்பட்டது என்றாலும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது ஒன்றாவது எதிரி ராஜேஸ்வரியும் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக வந்திருந்தார் என்றால் அவரை நான் பார்க்கவில்லை.

9. 3வது எதிரி ராஜாராம் என்பவருக்கும் எனக்கும் இடையே தான் உரிமையியல் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து 24 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது என்றால் நீதிமன்றத்தில் தீர்ப்பு கொடுத்து விட்டார்கள். 1, 2 எதிரிகள் என்னை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. நானும் என் கணவரும் சேர்ந்து அருண், அவருடைய மனைவி முருகேஸ்வரி மற்றும் இந்த வழக்கு 2வது எதிரி மணி என்ற மணிகண்டன் ஆகியோர்களை தாக்கியதாக எங்கள் மீது ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் இருக்கிறது என்றால் அவர்கள் என்னுடைய வீட்டிற்குள் வந்து என்னை தாக்கி விட்டு, எங்களுக்கு

முன்பாக சென்று புகார் கொடுத்து விட்டார்கள். அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் என்னுடைய கணவரும் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி சாத்தூர் தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று நிபந்தனை கையெழுத்து செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

11. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சிவில் வழக்கில் உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குக்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jul 2026 12:34

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : செல்வராஜ் | Father/Husband Name : மாரிமுத்து |
| Age : 66 | Village : என்.சுப்பையாபுரம் |
| Taluk : | Calling : வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jul 2026 12:39

(A1 present. A2, A3 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் என்.சுப்பையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார். 2 வது எதிரி ராஜேஸ்வரியின் தங்கை மகன் ஆவார். 3 வது எதிரி ராஜேஸ்வரியின் தம்பி ஆவார்.

2. 17.04.2022 ம் தேதி இரவு 07.00 மணிக்கு நானும் என்னுடைய மனைவியும் எங்களுடைய வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தபோது 1 வது எதிரி ராஜேஸ்வரி அங்கு வந்து தேவடியா மகனே வெளிய வாடா, தேவடியா முண்ட வெளிய வாடி என்று, எதுக்கு இப்படியே வம்பு இழுத்துக்கொண்டிருக்கிறாய் என்று கூறினார். அந்த பிரச்சனை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 2 வது எதிரி மணி எங்களுடைய வீட்டிற்கு பின்பக்கம் இருந்த சவுண்டால் மரத்தை ஒடித்து ஏன்டா தேவடியா மகனே, தேவடியா மகளே உங்களை அடிச்சி கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி அடிக்க வந்தார்.

3. அப்பொழுது பரமசிவம், சுப்புலட்சுமியும் ஆகியோர் அங்கு வந்து ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள் என்று கேட்டபோது ராஜேஸ்வரி அவருடைய வீட்டிற்குள் சென்றுவிட்டார். 2 வது எதிரி மணி சம்பவ இடத்திலிருந்து சென்றுவிட்டார். நாங்களும் வீட்டிற்குள் சென்றுவிட்டோம். நானும் என்னுடைய மனைவியும் மறுநாள் காலை 9.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தோம். என்னுடைய மனைவி கொடுத்த புகார் மனுவில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. புகாரை யார் எழுதினார் என்றால் காவல் நிலையத்திற்கு வந்த ஒரு நபர் எழுதிக் கொடுத்தார். அவர் யார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் மறுநாள் காலை 09.00 மணிக்கு சென்றோம். எங்களுக்கு மனு ரசீது காவல் நிலையத்தில் கொடுத்தார்களா என்றால் இல்லை. நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்தவருக்கும் என்னுடைய உறவினர் ஆடிட்டர் குருசாமி என்பவருக்கும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. நாங்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு

சென்று கூறிய பிறகுதான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான்.

5. போலீசார் என்னை விசாரித்த போது 2வது எதிரி எங்கள் வீட்டிற்கு பின்பக்கம் இருந்த சவுண்டால் மரத்தை உடைத்து, அந்த குச்சியை வைத்து அடிக்க வந்தார் என்று கூறினேனா என்றால் கூறியுள்ளேன். எங்களுக்கும் மூன்றாவது எதிரி ராஜாராமுக்கும் தான் உரிமையியல் வழக்கு நடைபெற்றது என்றால் சரியல்ல, எதிரிகள் மூவரும் அந்த வழக்கில் தரப்பினர்களாக இருந்தார்கள். ஒன்று மற்றும் இரண்டு எதிரிகள் எங்களை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6. கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு நானும் என்னுடைய மனைவியும் அருண், அவருடைய மனைவி முருகலட்சுமி மற்றும் 2வது எதிரி மணி ஆகியோர்களை அடித்ததாக எங்கள் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூன்றாவது எதிரியை ராஜாராம் தூண்டுதலின் பெயரில் மேற்படி சம்பவம் நடைபெற்றது. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற போது சம்பவ இடத்தில் கேமரா உண்டு என்றால் இல்லை, அவருடைய வீட்டிற்குள் தான் கேமரா வைத்துள்ளார். எங்களுடைய வீடு அருகே வேறு கேமரா இருக்கிறது என்றால் சம்பவம் எங்களுடைய வீட்டிற்குள் வைத்து நடைபெற்றது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கில் என்னுடைய மனைவி புகார்தாரர் என்பதால் அவர் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகே உள்ள கேமராவின் பதிவுகளை பார்த்தால் இந்த வழக்கில் நாங்கள் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றதா என்பது தெரியவரும் என்றால் கேமராவில் தெரியாது. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றாலும், இது பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jul 2026 12:57

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P